செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

உ

சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ௵ (1889) ஆவணி மீ ௨௮ உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஉ] யாழ்ப்பாணம்:- சாதாரண ௵ கார்த்திகை மீ ௩ உ வெள்ளிக்கிழமை (20-11-1970) [இல-௩௯

# வெண்ணீறும் கண்மணியும் விளங்க அவதரித்தாய்!

## நானிலம் போற்றும் நல்லூர் நாவலர் கருணை

புலவர் சிகாமணி, பண்டிதர்
பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேசுவர ஐயர்

உலகம் கற்றோர் ஒருவரிருந்தாலும் செழித்து விளங்கும். யாழ்ப்பாணம் எங்கும் விளங்கியது ஆறுமுக நாவலர் பெருமானின் கல்விப் பேரொளியேயாம். தனக்கென நீள நினைந்து வாழும் மாந்தர் தொகுதி போலாது பிறர் பயன் கருதி வாழ்ந்த நாவலர் பெருமானைப் போல யாரை நினைக்கலாம் ஆரூரனில்லை அப்பனில்லை. திசையளந்த ஆறுமுக நாவலருமில்லை, சுத்தாத்துவித சித்தாந்த பானுவைப்போன்ற ஒருதினகரன் வேண்டாமா? இன்று பிற இடங்களில்சென்றால் "நாவலர் பரம்பரையா"? அப்படி யார் பிறப்பார்? என்று அன்பாகக் கூறுவர். ஒரு பெரிய நிலையம் சைவப்பிரகாச வித்தியாசாலையாகும். ஸ்ரீமத் த கைலாசபிள்ளையவர்கள் இருக்கிறார்கள். அங்கே தற்போது விகசிக்கும் சரஸ்வதி முகப்புடன கூடிய கல்வி நிலையத்திலேதான், எவ்வளவு தமிழர் வடமாகாணத்தில் இருக்கிறார்கள். தமிழபிமானம் தமிழரின் பொக்கிஷம் அல்லவா? தமிழர்களும், பிராம்மணக் குருமாரும் நாவலர் என்றவுடன் வணங்க வேண்டாமா? ஒவ்வொரு சொல்லும் நாவலர் பெருந்தகையிடம் உரைமாற்றுக் கடந்த தங்கமேயாகும். நாவலர் நாமம் வாயாற் கூற வைத்த ஆசிரியர்கள் பலர்.

சித்த விழுப்பொருளும் வேத உபாகமச் செம்பொருளும், உபநிடதப் பிரமாண அரும்பொருளும் பெரியபுராண உபோற்காதம் காட்டும். சேனாவரையம், இலக்கணக்கொத்து முதலியவை முகத்தினழகைக் கண்ணாடி காட்டுவது போலச் செந்தமிழ்ச் சிறப்பையும் நூல்களின் பயனாகிய இனிமையையும் தெரிக்கும். பிரசங்க முறையும் நாவலர்பெருமானின் செஞ்சொற் பிரயோகத்தால் காணலாம். நான் சைவப்பிரகாச வித்தியாசாலையிற் கற்றதனால் இந்தியாவிலுள்ள அரிய நான்மறைகண்டசீரியோர் அவைகளில் பேச இடமும் பாராட்டும் பெறக்கூடியதாக இருந்தன. திரு. த. கைலாச பிள்ளையவர்கள் "பிரசங்கரத்தினம்" என்று பாராட்டினார்கள். என்

(வளர்ச்சி 6-ஆம் பக்கம்)

## நல்லூர் நாவலர் நிலையத்தில் நாவலர் குருபூசை

21-11-70 சனிக்கிழமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையாதரவில், நல்லூர் ஆறுமுக நாவலர் நிலையத்தில் குருபூசை நடைபெறும். பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை, ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள். திரு. செ. கதிரேசர்பிள்ளை. திரு. த. குமாரசுவாமிப்புலவர் முதலியோர் இக் குருபூசையிற் கலந்து சொற்பொழிவாற்றுவார்கள். திருமுறையோதல், தேவார பாராயணம், மாகேசுர பூசை ஆகியனவும் இடம்பெறும்.



நாவலர் சற்குரு வணக்கம்

வெண்ணீறும் பொன்னொளி மேனியும் கண்மணி வீறழகும்
பண்ணார் சிவப்பிர சங்கக் கொலுவும் பழுத்தபண்பும்
எண்ணார்நின் செம்முக மண்டல முந்நெஞ் சிருத்திவைப்பாய்
கோண்ணீ எம் ஆறுமுகநா வலசற் குருமணியே.

— சற்குருமணிமாலை

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

[பம்பாய் நகரிலிருந்து வெளிவரும் பிரசித்திவாய்ந்த 'பவான் சஞ்சிகையின் (Bhavan's Journal) 10-8-69 - விசேட மலரில், "ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்" என்ற தலைப்பில் திரு. ம சி. சிதம்பரப்பிள்ளை, கொழும்பு - அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்]

### நூற்றாண்டுத் தினம்

இலங்கை வாழ் தமிழ் மக்கள் பொதுவாகவும், சைவசமய மக்கள் சிறப்பாகவும், தங்கள் அன்புக்கும் ஏகோபித்த கௌரவத்துக்கும் பாத்திரமான கல்விக்கடலாம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை இத்தினத்திற் கொண்டாடுகின்றார்கள். 'நாவலர்' என ஈழநாட்டிலும், தாய் நாட்டிலும், யாவராலும் பாசத்துடனும் கௌரவத்துடனும் அழைக்கப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள், யாழ்ப்பாணப் பட்டினத்துக்கு அருகாமையிலுள்ளதும், பெருமை வாய்ந்த பழைய இராஜதானியாகவும் விளங்கிய நல்லூர் எனும் நற்பதியில், சகலசெல்வங்களும் நிறைந்த ஒருஉயர்குடும்பத்தில், 1822ம் ஆண்டு, மார்கழித் திங்கள் 22-ஆம் நாள் அவதரித்தார்.

### வளரும் பயிரை முளையிற் றெரியும்

பிறக்கும்போதே மேதாவிலாசம் உடையவராகையினால், இவரது தந்தையார் பாடி அரைவாசியில் விட்டுப்போன ஒரு நாடகத்தைத் தமது ஏழாம்வயதில் பூர்த்தி செய்தார் இளமையில் இவரது அதி உயர்ந்த விவேகத்தைக் கவனித்த இவரது ஆசிரியர்கள் - அக் காலம் பணம் படைத்தவர்களே தம் மக்களுக்கு ஆங்கிலக் கல்

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

## நாவலர் நினைவு

[திரு. மா. பீதாம்பரன் — திருமலை]

திருஞான சம்பந்தர் தேவா ரம்பெறு
திருச்சிவ தலங்கள் இருபாற் றிகழும்
சீருடை ஈழச் சிரமென விளங்கும்
யாழ்நாட் டுத்திரு நெல்வேலி தன்னில்
வாழ்ந்து வடபாற் சென்றுகலை பயின்று,
ஞான சித்திக்கு நல்லுரை கண்டு
பௌட்க ராகமப் பதிநூல் விளக்கிய
ஞானப் பிரகாச முனிவரர் ஆகிய
அஹிம்ஸா மூர்த்தியின் அரும்பெரு மரபினில்
மகிமைசேர் நல்லைப் பதியினிற் கந்தவேள்
கருணையோடு வாழ்ந்த கந்தர்தம் மனைவி
அருங்குணச் செல்வி சிவகாமி அம்மையார்
தந்தருள் பாலனாய் வந்தவ தரித்தோய்!
செந்தமிழ் மொழியும் செந்நெறிச் சைவமும்
நந்தம் நாட்டினும் நம்பா ரதத் தினும்
வளர்த்திட வந்த வள்ளால் வணக்கம்;
விளங்கிட வேதம் விரித்தோய், வணக்கம்.
"சைவர் அஞ்ஞானிகள், சாஸ்திரம் பொய்யே,
உய்வைத் தரும் தரும் எம்மதம் மெய்யே"
என்றுரைத் திட்டவர் ஏங்கிடச் செய்தனை,
குன்றென நின்றனை கோதிலா மணியே!
மேற்றிசை வாழ்நர்தம் மிடுக்குரை அடக்கினை
நாற்றிசை பரப்பினை நன்னெறிச் சைவம்
ஆங்கிலம் கற்றனை ஆரியம் அறிந்தனை
சங்கரன் அருள்நூல் சாலவும் ஆய்ந்தனை.
பேர்சிவற் பாதிரி பெருமையைப் பெற்றுய்
ஆசியோ டவர்பண் டிதனாய் அமர்ந்தாய்
அன்னவர் பைபிள் ஆக்கினை தமிழில்
சென்னைக்குச் சென்றனை செழுங்கலை வாணர்
நன்னலம் ஆய்ந்தனர் நவின்றனர் நயப்பு.
அரசகே சரியார் அருந்தமிழ் நிலவும்
புரமாம் யாழ்ப்பெயர்ப் பூமிசேர் தமிழ்நலம்
செறிந்தது தென்மொழி பெயர்ப்பே சிறந்தது
சிறந்தது! என்னச் செப்பினர் புலவோர்
மகாவித்து வானும் மஹாலிங்க ஐயர்
மதிப்பையும் பெற்று மாகே சரியென
ஆழ்கடல் கடந்து அன்புசால் நின்பதி
ஈழமா நாட்டகம் இன்புடன் வந்தனை
சிந்தனை பழுத்த சிவநெறிச் செல்வரும்
சொந்தமொழி போற்றும் தூயநன் மக்களும்
வந்தனம் மங்கல வரவேற் பாதிய
வழங்கினர் வாழ்த்தினர்; வாரம் பூண்டனர்.
'பாதிரி மார்க்கம் வளர்ந்திட் வளர்ந்திட்
மாதுமை பங்கன் மார்க்க தூஷணப்
புத்தகம் பலப்பல புற்றீசல் என்ன
எத்திசைக் கண்ணும் எழுந்திடல் கண்டு
எதிர்நூல் பலவும் இயற்றிச் சைவப்
பதியியல் பல்நும் பயிலப் பரப்பினை.
"யாழ்ப்பாணச் சைவ சமயநிலை" யாத்தனை
வாழ்க்கையை வடித்துக் காட்டினை- மக்கள்
'மெய்மெய் சோற்றுக் கிறிஸ்தவர் உண்டேனல்
பொய்யல' என்று புகன்றனர் எங்கும்
தொண்டர் புராணம் சூசனம் வசனம்
தண்டமிழ் மேலாம் தரமெனத் தர்தனை
சைவவினாவிடை தந்தனை அன்புடன்
உய்ந்தனம் என்றே உவந்தனர் சிறுவரும்
பாலபாடம் நான்காம் புத்தகம்
சாலச்சிறந்த தருமசாஸ் திரப்பொருள்
பலப்பல சைவ நூல்கள் பதித்தனை
உலகம் போற்றிய துய்ந்தது சிவத்தமிழ்
சீர்பூத்த கருவிநூற் சிறப்பினைக் கண்டுநின்

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

## சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்து சாதனம்

சாதாரண ஞூ கார்த்திகை மீ ரு-உ வெள்ளிக்கிழமை [1970]

## நாவலர் பெருமானுக்கு நாம் புரியும் அஞ்சலி

எதிர் வரும் 21-11-70 சனிக்கிழமை ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் குருபூசை விழா நாடெங்கும் கொண்டாடப்பெறும். அவருடைய நாமத்தை மக்கள் நினைந்து அவருக்கு அஞ்சலி செலுத்துவதற்கு இத்தகைய விழா பெரும் உதவியாகவிருக்கும். அவருக்கு நாங்கள் செலுத்தக்கூடிய சிறந்த அஞ்சலி அவர் எழுத்து மூலமாகவும் பேச்சு மூலமாகவும் மக்களுக்கு தம் காலத்தில் வெளியிட்ட கருத்துக்களின்படியொழுகுதலேயாகும். நாவலர் பெருமான் இறைவனடி சேர்ந்து தொண்ணூறுண்டுகளுக்கு மேலாகின்றன. நமது மக்கள் அவருடைய கருத்துக்களை எவ்வளவுக்கு பின்பற்றி வாழ்கின்றார்களென்பதை நாம் சிந்திக்கும்பொழுது நாங்கள் களிப்படைய இடமில்லை. மக்கள் இடத்தில் இறை வணக்கமும் சமயவொழுக்கமும் சைவ சாதனங்களைப் பேணும்பற்றும் வரவரக் குன்றி வருகின்றன. நாவலர் பெருமானுடைய ஆன்மா திருப்தியடைதற்குரிய முறையில் நமது வாழ்க்கையை நாம் திருத்திக் கொள்ளுதல் வேண்டும்

நாவலர் பெருமானுடைய நூல்களை இக் காலத்தில் மக்கள் பெறமுடியாமலிருக்கின்றனர். நாவலருடைய பாலபாடங்கள், முதலாம் இரண்டாம் சைவ வினாவிடைகள், கந்தபுராண வசனம், திருத்தொண்டர் பெரிய புராண வசனம், திருவிளையாடற்புராண வசனம் முதலிய நூல்கள் அவரால் நம்மவர்களுக்கு உதவப்பெற்ற அறிவுக் களஞ்சியம். இவற்றை அச்சிட்டு சைவ மக்களுக்கு வழங்குவதற்கு நமது நாட்டிலுள்ள சைவசமயச் சபைகள் முன்வருதல் வேண்டும். இக்காலக் கல்வி முறைப்படி நமது சைவப் பிள்ளைகளுக்கு அவருடைய நூல்களை பள்ளிக் கூடங்களில் கற்பிக்கவுமிடமில்லை. அக் குறையை சைவசமயச் சபைகள் கிராமங்கள் தோறும் பிரத்தியேகமான வகுப்புக்களை நடத்தி அந்நூல்களை பிள்ளைகளுக்கும் முதியோர்களுக்கும் கற்பிக்க ஒழுங்கு செய்தல்வேண்டும். ஒவ்வொரு சைவனுடைய வீட்டிலும் நாவலர்பெருமான் எழுதிய சமய நூல்கள் இருத்தல்வேண்டும். அப்பொழுது வீட்டிலுள்ளவர்கள் அவற்றைப் படிக்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்கும். அதனால் அவருடைய ஞானோபதேசம் மக்கள் உள்ளத்தில் பதியும், பின் அவர்கள் அவருடைய கருத்தின்படி ஒழுகுவார்கள். அங்ஙனம் ஒழுகுவதே நாம் அவருக்குச் செய்யக்கூடிய சிறந்த அஞ்சலியாகும்.

"கண்ணே யெனதிரண்டு கண்மணியே நாவலனே
மண்ணுதி யாழுடம்பு மாய்ந்தாலும் — எண்ணுருன்
கீர்த்தி யுடம்பு கெடுமோ கிளக்குமுண்மை
வார்த்தை யரிச்சந்திர மன்னவனே — போர்த்தவிருள்
நீக்குங் கிரிவிளக்கே நின்னி னெமக் கோர்குரவர்
வாய்க்குநா ளெந்நாளோ மற்று.

—சுன்னுகம், அ. குமாரசுவாமிப் புலவர்

## நாவலர் நினைவு

[1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி]

இருபத் தொன்பதாம் வயசினில் இயற்றமிழ்க்
கிருநிதி யாகிய நன்னூல் விருத்தி
அருமையி னாய்ந்து பதித்தனை அண்ணல்
உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர்
இச்சகத் தெழுந்தனர் என்னப் போற்றினர்
'சைவ சமய நெறிக்' குரை தந்து
மெய்யாகமப் பொருள் விளக்கினர் நாவலர்.
நாவலர் நவின்ற நன் மொழி பயின்று
ஆவலோ டியாவரும் ஆகம முறைப்படி
சிவதீட்சை பெற்றுச் சீவகா ருண்ணியம்
தவமெனத் தாங்கித் தரும சீலராய்
பவவினை யகற்றிப் பரனருள் பெற்று
நால்வர் திருநெறி நாற்றிசைக் கண்ணும்
சால்புற வளர்த்திட வம்மின்! வம்மின்!!
போற்றுகம் வம்மின்! போற்றுகம் வம்மின்!
ஆற்றல்சால் நாவலர் அடிபணிந் தேத்துவம்.
ஞானப் பிரகாச முனிவரர் மரபும்
சேனுதி ராயராம் செழுங்கலைச் செல்வர்
செந் தமிழ் மரபும் செழித்து
நந் தம் நாடு நலமெலாம் பெறவே!

## மக்கட்பிறப்பின் மாண்பு

(திரு. செ. வைத்தியலிங்கம், எம். ஏ., எம் லிட்.,)

பிறவி அமைப்பு

உலகத்திலே ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் ஈருகப் பலதிறப்பட்ட உயிரினங்கள் உள்ளன. நூல்களிலே கூறப்படுகின்ற எண்பத்து நான்கு நூறாயிரயோனி பேதங்களிலே சிறந்தொளிர்வது மானுடப் பிறவியேயாகும்; இம்மானுடப் பிறவி அடைந்ததானது கடலைக் கையால் நீந்திக் கரை சேர்ந்ததை ஒக்கும் என 'சிவஞானசித்தியார்' இயம்பும்.

'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய்
மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப்
பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப்
பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த்
தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர
சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்
திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள்
கண்டின்று வீடுற்றேன்'

என்ற சிவபுராணப் பகுதியுள் மணிவாசகர் தாம் எடுத்த பல்பிறவி அநுபவத்தைக் கூறுகிறார்; மானுடப் பிறவியை மீளவும் எடுத்து இறைவன் திருவடி ஞானத்தால் இறைவனை இனங்கண்டு கொண்டதையும், ஈடேற முடிந்ததையும் இயம்புகின்றார். அவரே தொடர்ந்து,

"ஆனையாய்க் கீடமாய்
மானுடராய்த் தேவராய்
ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந்
தெய்த்தேனை
ஊனையும் நின்றுருக்கி
யென்வினையை யோட்டுகந்து
தேனையும் பாலையும்
கன்னலையும் ஒத்தினிய
கோனவன்போல் வந்தென்னைத்
தன் தொழும்பிற்
கொண்டருளும்
வானவன் பூங்கழலே
பாடுதுங்காண் அம்மானாய்"

என்று மானுடப்பிறவியிலே தம் எய்ப்பில் வைப்பாக இறையருளானது துணைநின்று வினை கடிந்து ஆட்கொண்ட திறத்தினைப் பாடுகின்றார்; அதுவும் தம்மைப் பெண்ணாகப் பாவித்துக் கொண்டு உயிர்நாயகன் முன்னிலையில் அம்மானையாகப் பாடி மகிழ்கிறார். இவையெல்லாம் அருளநுபவ வாக்கு நலன்கள். இவற்றால், பலதரப்பட்ட பிறவிகளுள் ஒன்றாகிய மானிடப் பிறவி அமைந்தால் மட்டும் போதாது, அப்பிறவியில் மெய்யறிவு தலைப்பட்டு நிற்கும் போதுதான் பிறவிப்பயன் கிட்டும்மென்பது தெளிவாகின்றது.

"மனித்தப்பிறவியும் வேண்டுவ
தேயிந்த மாநிலத்தே"
என்பதும்,
"வாய்த்தது நந்தமக் கீதோர்
பிறவி மதித்திடுமின்"

என்பதும் குனித்த புருவத்தோடும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்போடும் ஆனந்தக் கூத்தாடும் ஆடல் வல்லானைக் கண்டு மகிழ்ந்த நிலையில் திருநாவுக்கரசர் தெருட்டிய தெய்வநலத் தீந்தமிழ் வாக்குகளாம்.

"காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்பதற்கிணங்க மக்களாக நல்வாய்ப்பு உண்டாகிய போதே பிழை வாராமல் காக்கவும், மக்கட்பண்பாகிய அன்பை வளர்க்கவும் பாடுபடுதல் வேண்டும் பேரருளாளர் தாயுமானவரே.

"இப்பிறவி தப்பினால் எப்
பிறவி வாய்க்குமோ
ஏதுவருமோ அறியேன்........"

என அலமந்து துடிதுடிப்பாரே யானால் எளிய மக்கள் எந்த அளவிற்குப் பொறுப்புணரக் கடமைப்பட்டவர்கள் என்பது தெளிவு.

'வந்த வரவை மறந்து—மிக்க
மாதர் பொன்பூமி மயக்கத்தில்
[ஆழும்
இந்த மயக்கை அறுக்க—எனக்
கெந்தை மெய்ஞ்ஞான எழில்
வாள் கொடுத்தான்"

எனும் அவர்தம் வாக்கு, மக்கள் அருளாக்கம் பெற வழிகோலும் ஒளிவிளக்கு.

மேலும், பிறப்பினையும் இறப்பினையும் அழித்தற்கு உபாயத்தினை இப்பிறவியிலேயே பெறவேண்டுமெனில் பிறப்பிறப்பற்றவனாகிய ஒருவனைத் தானே நாடவேண்டும்!

"சிறந்தமெய்ப் பொருளை
அழிவிலா மணியைத்
தெரிந்துமுக் காலமும்
உணர்ந்து
துறந்தவர் இதயா சனத்திருந்
தவனைத்
தொடரின்ப துன்பமற்
றவனைப்
பிறந்தபல் லுயிரின் மனத்தள
[வுறைந்து
பிறப்பிறப் பென்றிலா
தவனை
மறந்தவர் சுவர்க்கப்
பதியையும் மறந்து
மண்ணினில் மதிமறந் தவரே"

என்ற உமறுப்புலவர் மணிவாக்கும் ஓர்தல் நன்று.

"நல்லதோர் வீணை செய்தே
நலங்கெடப் புழுதியில்
எறிவதுண்டோ"

என்ற கவிஞர் பாரதியின் வாக்கும் மக்கட் பிறப்பின் மாண்பை உணர்த்தும்.

[வளரும்]

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக......

[1-ஆம் பக்கத்து வளர்ச்சி]

வியை ஊட்ட வசதிபடைத்தவர்களாக இருந்தார்களாகையினால் – இவருக்கும் ஆங்கிலக் கல்வியை அளிக்க வேண்டுமெனக் கூறினர்.

பார்சிவல் துரை

நாவலர் வாழ்ந்த காலத்தில் ஆங்கில வித்தியாசாலைகள் அரிது எனலாம் ஆகவே நாவலரின் தமையன்மார் ஆசிரியர்களுடைய யோசனைக்கிணங்க, அக் காலம் அமெரிக்கமிஷனரிமார்களால் யாழ்ப்பாணப் பட்டினத்தில் நடத்தி வந்த ஒரே ஒரு ஆங்கிலப் பாடசாலையில் ஆங்கிலம் கற்க நாவலரை அநுமதித்தனர். கண்ணியம் நிறைந்த பார்சிவல் துரை என்ற பாதிரியாரே இவ்வாங்கில வித்தியாசாலைக்குப் பொறுப்பாகஇருந்தார் ஆறுமுகத்துக்கு அப்போது வயது பன்னிரண்டு.

பதினைன்கு ஆண்டு
அஞ்ஞாதவாசம்

ஆண்டவன் சித்தம்போலும்! பதினுன்கு ஆண்டுகள் பார்சிவல்துரையினுடைய ஆங்கில வித்தியாசாலையில் – மனதுக்கு வெறுப்புநிறைந்த கிறிஸ்தவ சூழலில் காலங் கழிக்க நேர்ந்தது! ஸ்ரீ ராமபிரானின் பதினுன்காண்டு வனவாசம் போன்றது எனலாம். ஆறுமுகத்தின் கல்வியின் ஊக்கத்தையும் உயர்வையும் கவனித்த பார்சிவல் பாதிரியார் தனது பாடசாலை மாணவர்களுக்குத் தமிழ் போதிப்பதற்கு இவரை ஆசிரியராக நியமித்தார். சில காலம் சென்றபின்பு, பாதிரியார் தாமே ஆறுமுகத்திடம் தமிழை மிகவும் பணிவுடன் கற்றார்.

பைபிள்

பாதிரியாருடைய விருப்பத்துக் கிணங்கி கிறித்தவ பைபிளை தமிழில் மொழிபெயர்த்தார். அக் காலத்தில் சென்னையிலும் இந்நூல் மொழி பெயர்க்கப்பட்டிருந்தது. இந்த இரு மொழிபெயர்ப்பு நூல்களையும் சீர்தூக்கி ஆராய்ந்த வல்லுனர்கள், ஆறுமுகம் மொழிபெயர்த்த நூலே அதிவிசேடம் வாய்ந்ததாகத் தேர்ந்தனர்.

மத மாற்றம்

ஆசிரியரான ஆறுமுகம், தமது சொந்த சைவப்பிள்ளைகளும் மற்றும் சைவ மக்களும் எவ்வாறு மிஷனரிமாரினுல் மத மாற்றம் செய்யப்படுகின்றார்கள் என்பதனை மிகவும் நுணுக்கமாகக் கவனிக்கலானார். தங்கள் குறிக்கோளை அடைவதற்கு என்ன என்ன முறைகளைக் கையாளுகின்றார்கள் என்பதனையும் கூர்ந்து கவனிக்கலானார். மிஷனரிமார்களுடைய மாயவலையில் சைவமக்கள் பொருளுக்காகவும், உத்தியோகங்களுக்காகவும் வந்து விழுவதனைக் கண்ட ஆறுமுகம் கணமேனும் சகிக்கமுடியாத

(வளர்ச்சி 5-ஆம் பக்கம்)

## இராமநாதன்மகாவித்தியாலயம் (உசன், மிருசுவில்) நடாத்தும் நாவலர் விழா

20-11-70 பிற்பகல் 2-45 மணிக்கு, கொடிகாமம் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் நாவலர்விழா சிறப்புற நடைபெறுகின்றது ஈழத்தின் பிரபல கவிஞர்கள் கலந்து கொள்ளும் கவியரங்கம், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி முதலாந் தமிழறிஞர்களின் சொற்பொழிவுகளும், மாணவர் நிகழ்ச்சிகள் ஆதியனவும் இடம்பெறுகின்றன.

## அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் இளவாலையில் எடுக்கும் நாவலர் விழா

இவ்விழா 21-11-70 சனிக்கிழமை மாலை 6-30 மணியளவில் மூள்ளானைக் கனகசபை வித்தியாசாலையில் நடைபெறும். நீண்டதோர் ஊர்வலம் நடைபெறும். இவ்விழாவை சைவப் புலவர்மணி த. குமாரசுவாமிப் பிள்ளை தொடக்கி வைப்பார்கள். காங்கேசன்துறை வட்டாரக் கல்வியதிகாரி திரு. க. சோமசுந்தரம் அவர்கள் தலைமை தாங்குவார்கள். புரவலர் க. வேலுப்பிள்ளை, சைவபூஷணம் நம. சிவப்பிரகாசம், அறநெறிக்காவலர் செ. முத்துத்தம்பி, சைவப் புலவர் வைத்திய கலாநிதி திரு. க. சிற்றம்பலம் என்போர் பேச்சாளராகக் கலந்துகொள்வர்.

கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில்

வழக்கு இல: M. B. 2749

தெல்லிப்பழை, வீமன்காமம், காலஞ்சென்ற சின்னக்குட்டி
கணபதிப்பிள்ளை பொன்னையா —வழக்காளி
வீமன்காமம், K. பொன்னையா சிவபாலன் —பதில் வழக்காளி

எதிராக

வண்ணார்பண்ணை கிழக்கு, றெயில் ரோட்,
1. கந்தர் சின்னப்பொடியும மனைவி
2. அன்னலெட்சுமியும்
வண்ணார்பண்ணை கிழக்கு, றெயில் ரோட் 17/4
3. சுந்தரம் காராளபிள்ளை எதிராளிகள்

M. B. 2749ம் இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் 1970-ம் ஆண்டு டிசம்பர் (மார்கழி மீ 22ந் உ (22-12-70) செவ்வாய்க்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 4050/-ம் மேலும் 3000/ ரூபாவுக்கு 9-3 59 தொடக்கம் 16-6 59 வரைக்கு வருடமொன்றுக்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5 வீத வட்டியும் முத்திரைச் செலவு 32 ரூபா 10 சதம் பவுண்டேச் மற்றும் விற்பனவுக்குரிய சலார்களும் இதில் ரூபா 3000 குறைய.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கும் பகுதியும் வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கிறை 'பனங்காடு' நிலப்பரப்பு 2 குளிகள 9 வீடும், குடிசைகளும், கிணறும் செய்பயிர் வான்பயிர்களும், மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும், பதிவு D. 209/86 கொண்டதுமான இவ்வாதனத்துக்கு எல்லை கிழக்கு: ஒழுங்கை, வடக்கு: திருவேங்கடம் மனைவி பாக்கியலெட்சுமியினுதனம். மேற்கு: வண்ணார்பண்ணை பெருமாள் கோவிலுக்கும், உவெஸ்லியன் மிஷன் பாடசாலைக்குரிய ஆதனம் தெற்கு: கணபதிபபிள்ளை கந்தையாவினுதனம். இது முழுவதும்.

வி. செ, குட்டிப்பிள்ளை,
"இராச கிரி" ஏலகிற்றனவாளரும் கோட்கொமிஷனரும்.
643, காங்கேசன்துறைவீதி, Commissioner Sales & Valuer
யாழ்ப்பாணம் 8-11-70 எம் 371 20-11-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

1 ஆறுமுகம் குமாரசுவாமி 2 பெண் தனலெட்சுமி
களபூமி, காரைநகர் கிழக்கு. —வழக்காளிகள்
வழ இல: M B 9486 எதிராக
1 சின்னப்பொடி செல்லையா 2 பெண் துரையம்மா
வண்ணார்பண்ணை வடமேற்கு, யாழ்ப்பாணம்.
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9486ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970ம் ஹு மார்கழி மீ 23-ம் திகதி (23-12-70) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 7545ம், 8..0-67 தொடக்கம 4-10-68 வரைக்கும் ரூபாய் 4000க்கு பத்து வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 421-65ம் இத் தொகையில் ரூபா 2000 கொடுக்கப்பட்டுள்ளது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணைப் பகுதி வண்ணார்பண்ணை தென்மேற்கு கோவிற்பற்று 'பனங்காடு' நிலப்பரப்பு 5, 3/8 (Lms V. C.) கல் வீடும், கடை கட்டிடங்களும், கிணறும், செய்பயிர் வான் பயிர்களும் இதற்கெல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு ரோட்டு, மேற்கு குறிச்சேட் பொன்னையா பெண் செல்லத்தின ஆதனம், தெற்கு நாகலிங்கம் தம்பித்துரையின ஆதனம், இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும, ஆனுல் மேற்கெல்லைக் காணி சொந்தக்காரனுக்குரிய கிணற்றில் பங்கு வழிவாய்க்கால் பாவிப்பு உரித்தும் புற நீங்கலாக. பதிவு இலக்கம்: D 241/94

167/1, கோவில் வீதி, ப, நா தருமலிங்கம்
நல்லூர் வடக்கு, கொமிஷனரும், விலைமதிப்பாளரும்,
யாழ்ப்பாணம். 4-11-70 எம். 363 20-11-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

79, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம்.
1 இராசசுந்தரம் துரைராசாவும்
2 பெண் புஸ்பராணியும் —வழக்காளிகள்
இல: M B 10637 எதிராக
சுதிரிப்பாய், அச்சுவேலி, கறுவல் சுந்தரம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10637-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970ம் ஹு மார்கழி மீ 23-ம் திகதி (23-12-70) புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 1800/-ம் இந்த ரூபா 1800/-ம் 25-7-69 தொடக்கம் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 265-26 சதம்

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலிக் கோவிற்பற்று கதிரிப்பாய் இறை "கொல்லைவாரி கலட்டி" நி. பர. 15 குளி 12, 7/16 எல்லை கிழக்கு: கறுவல் சிற்றம்பலத்துக்குரிய ஆதனம். வடக்கு: கதிரிப்பாய்க் கிராம எல்லை. மேற்கு: நாகலி சின்னக்குட்டிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு: ஒழுங்கை. இதடங்கலில் சொரியலாய் நி. பர. 5 குளி 12 7/16ல் சொரியலாய் 2/3 பங்கு.

239 ஆஸ்பத்திரி வீதி இ.சு. தர்மரத்தினம்
யாழ்ப்பாணம் கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
எம். 361 13—11—70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் றிக்குவெஸ்ற் கோர்ட்டில்

யாழ்ப்பாணம் நல்லூர் இராசையா யோகம்மா —வழக்காளி
இல: 6121/A எதிராக

திருகோணமலை 32ம் நம், வீச்சுக்கார தெரு தற்பொழுது யாழ்ப்பாணம், அத்தியடி புதுறேட்டில் வசிக்கும் பொன்னம்பலம் பீதாம்பரமும் பெண் அன்னம்மாவும். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் றிக்குவெஸ்ற் கோட்டில் 6121/Aம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1970ம் ஹு மார்கழி மாதம் 30-ம் திகதி (30-12-70) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 730/-ம் இதில் ரூபா 500/-க்கும் 19—12 68 தொடக்கம் 4—9—69 வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய்

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானை கோவிற்பற்று சங்கானை இறை 'சூளாவி" பர. நே 8ம் (எட்டும்) கட்டிடங்களும் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு கனகசபை தில்லையம்பலத்தினுதனம், வடக்கு கொல்லன்புத்தரையிற் கோயிலுக்கும் மற்றவர்களுக்குமுரிய ஆதனம். மேற்கு அருணசலம் கந்தையாவினுதனம், தெற்கு வேலுப்பிள்ளை கந்தையாவுக்கும் தையல்பாக்கர் காசிப்பிள்ளைக்கும் பேரம்பலம் பெண் செல்லம்மாவுக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலும் E. 380/271ல் பதியப்பட்டிருக்கிறது.

இல. 24, முதலாம் குறுக்குத்தெரு, க. சுப்பிரமணியம்
யாழ்ப்பாணம், 30-10-70. கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்.
எம். 352 20-11-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கரம்பன் ஊர்காவற்துறை 1) இளையதம்பி சித்தம்பலம்
கைம பெண் வள்ளியம்மை — தத்துவகாரி
காலம்சென்ற இளையதம்பி சித்தம்பலத்தின் தத்துவ வழக்கில்
நிம்பர் 1557 — வழக்காளி

எதிராக

வேலணை கிழக்கு வேலணை (1) நாகநாதி வடிவேலு —எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 11021 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் காணியை 1970-ம் ஆண்டு மார்கழி மீ 19-ஆம் திகதி (19-12-70) சனிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை ரூபா 760/— இதில் ரூபா 400/— க்கு 7-8-69 தொடக்கம் 6-12-69 திகதி வரைக்கும் 12 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறபடும்வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 382-04,

### ஆதன விபரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி வேலணைக் கோவிற்பற்று வேலணை மேற்கு இறை "பீக்குளமும் சினன் ஆலடியும்" நிலப்பரப்பு 30 ம் அளவின் நிலப் பரப்பு 35 இதில் நடுக்கொள்ள நிலப் பரப்பு 5-ம் வடலிகளும் பனைகளும் எல்லை கிழக்கு நாகமுத்தன் கந்தையாவுக்குரிய ஆதனம், வடக்கு சின்னத்தம்பி இராமலிங்கத்துக்குரிய ஆதனம், மேற்கு விகடர் ஏமான்யுவேல் பெண் லில்லி இமாலாவுக்கு உரிய ஆதனம். தெற்கு வடிவேலு பெண் பாலலச்சுமிக்கு உரிய ஆதனம். இதடங்கலும் விற்கப்படும். பதிவு இலக்கம் C 319/253

ந. ஆறுமுகம்,
சித்தங்கேணி, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.
8-10-70. எம் 308 16-10-70. வெந்திஸ்மேஸ்தரும்,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கோப்பாய் தெற்கு 1. தமபிமுத்து நடராசா மனைவி
2. சரஸ்வதி —வழக்காளிகள்
இல: M B 11239 எதிராக
கோப்பாய் தெறகு, ஐயன் செல்லப்பா —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11239ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைபபடி பின்னுல் வீபரிக்கப்படும் துண்டுக்காணி, 1970 ம் ஆண்டு மார்கழி மீ 22-ந் திகதி [22-12-70] செவ்வாய்க்கிழமை முறபகல் 10 மணி தொடக்கம் அநதக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தோகை: முதல் வட்டி ரூபா 7975ம், 13-11-69 தொடக்கம 4-3-70 வரைக்கும ரூபாய் 6050க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 460/-

### ஆதன விபரம்

வட்மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு டிவிசன் கோப்பாய் கோவிற்பற்று கோப்பாய் தெற்கு இறை "கோச்சமிபுலம்" நிலப்பரப்பு (6) ஆறு குளி (1) ஒன்று எல்லை கிழக்கு: கதிரன் சின்னக்குட்டியினுடையதும் மறுபேர்களினுடையதும் ஆதனம், வடக்கு: குமாரசாமி மனைவி இராசம்மாவினுடைய ஆதனம, மேற்கு: சீமான் சின்னப்புவினுடையதும் மறுபேர்களினுடையதும் ஆதனம், தெற்கு: ரோட் இத்துடன் தென்கிழக்கோரமாக இருக்கும் கிணற்றில் பங்கும் தூரவை, ஆடுகாலில் பங்கும். இக்கிணற்றில் வடபக்கமாயிருக்கும் தண்ணீர் வாய்க்கால் பாவிப்புரிமையும் இது அடங்கலும். ஆனுல் சொல்லப்பட்ட தண்ணீர் வாய்க்காலின் வடமேற்கு தென்மேற்கோரமுள்ள ஆதனக்காரர்களின் பாவிப்பு உட்பட.

107, பெரியதெரு, எ.பி.பி. எதிர்மன்னசிங்கம்
யாழ்ப்பாணம், வெந்திஸ் கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
10-11-70 எம். 384 20—11—70

## வண்ணை, நாவலர் மகா வித்தியாலயப் பழைய மாணவர் சங்கம்

வண்/நாவலர் மகாவித்தியாலயப் பழைய மாணவர் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் 12-11-70ல் திரு. ரேவதி குப்புஸ்வாமி தலைமையில் நடைபெற்றது. எதிர்வரும் டிசம்பர் மாதம் 5ம் திகதி பொதுக் கூட்டத்தை நடாத்துவதென முடிவுசெய்யப் பட்டது. பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவெய்தியன.

1. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை விழாவினை நாவலர் மகாவித்தியாலயத்துடன் இணைந்து நடாத்துதல்.

2. நாவலர் பெருமானின் நினைவு முத்திரையை வெளியிடுமாறு அரசினரைக் கேட்டல்.

3. நாவலர் வெளியிட்ட நூல்களைச் சேகரித்து வைத்தல்,

4. பாடசாலையின் அபிவிருத்திக்கு உதவி செய்தல்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M B 9177

சுதுமலை தற்போது மதவாச்சி வனபகுதி பங்களா, பீதாம்பரம் மகாதேவா —வழக்காளி

எதிராக

உடுவில்,
1 யோசெவ் யேம்ஸ்
2 பெண் மேரியம்மா
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 9177ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும்ஒருதுண்டுக்காணியை 1970-ம்ஹு டிசம்பர்(மார்கழி) மீ 15-ந் திகதி (15-12-70) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 3194/-ம். இதில் ரூபாய் 2000/-க்கு 20-6-67 திகதி தொடக்கம் 8-2-68 திகதி வரைக்கும் 100க்கு 10 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 309-50 சதம்

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவிற் கோவிற்பற்று உடுவிலிறை "கொண்டலன் தோட்டம்" நிலப்பரப்பு 11 ஆனுல் அளவின்படியும் ஆட்சிப்படியும் நிலப்பரப்பு 10 இதில் கிழக்குப் பக்கமாக நிலப்பரப்பு ஐந்தும் (5) தெற்கேயிருக்கும் கிணற்றில் பங்கும் தூர்வை வழிவாய்க்கால் உரித்தும்; எல்லை கிழக்கு குட்டிப்பிள்ளை தம்பையாவின் உருமைக்காரருக்கும் முருகேசர் தம்பிப்பிள்ளைக்குமுரிய ஆதனங்கள், வடக்கு: கார்த்திகேசு பெண் பொன்னம்மாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், மேற்கு: மிகுதி ஆதனம், தெற்கு: குட்டிப்பிள்ளை தம்பையாவின் உருமைக்காரருக்குரிய ஆதனம், இதடங்கலும் இன்னும் தெற்கு ஒழுங்கையிலிருந்து குட்டிப்பிள்ளை தம்பையாவின் உருமைக்காரருக்குமுரிய காணிக்கூடாக இக் காணிக்குப் போகும் பாதையுரித்தும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
தெல்லிப்பழை, 14-11-70.
எம். 388 20-11-70.


## இந்துசாதனம்

திருத்திய வருடசந்தாவிகிதம்

| | |
|---|---|
| உள்நாடு | |
| ஆங்கிலம் | 10-00 |
| தமிழ் | 10-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 15-00 |
| வெளிநாடு | |
| ஆங்கிலம் | 12-00 |
| தமிழ் | 12-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 18-00 |

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல: M B 10437
வண்ணுர்பண்ணே கிழக்கு,
1 சரவணை தம்பையாவும் பெண்
2 செல்லம் |—வழக்காளிகள்
எதிராக
வண்ணுர்பண்ணே மேற்கு,
1 வேலுப்பிள்ளை பொன்னுத்துரையும் பெண்
2 பரமேஸ்வரி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 10437-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1970-ஆம் ஆ மார்கழி மாதம் 13-ஆம் திகதி (13–12–70) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10–00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 7375/-ம், 15 - 11 - 68 தொடக்கம் 25 – 2 – 70 வரைக்கும் ரூபாய் 5000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 427–75

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணுர்பண்ணே கோவிற்பற்று வண்ணுர்பண்ணே தென் மேற்கு இறை "பலுவிலித் தோட்டம்" பர. கில. இலா. 1, 1/2 செய் பயிர்களும் கல் வீடும் கிழக் கெல்லைக் காணியிலுள்ள கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் இதற்கு எல்லை கிழக்கு ஆறுமுகம் நடராசா பெண் மகேஸ்வரிக்குரிய ஆதனம், வடக்கு மீராசாகிப் நயினு மொகமட்டுக்குரிய ஆதனம், மேற்கு நடராசசிங்கம் கைம் பெண் கனகேஸ்வரிக்குமுரிய ஆதனம், தெற்கு ரோட்டு

**நா. ஸ்ரீ இரங்கநாதன்**
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
20, பெருமாள்கோவில்
வடக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம், 30–10–70
எம். 385 20 11 70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இலக்கம் T. 2000

மரணசாதனம் எழுதி வைககாது இறந்த கதிரேசு பொன்னம்பலத்தின் சொத்து அளவெட்டி யாழ்ப்பாணம் —இறந்தவர் கதிரேசு பொன்னம்பலம் கைம்பெண் அன்னம்மா அளவெட்டி தெற்கு அளவெட்டி
—தத்துவகாறி.

1. நாகமணி இராசையா
2. அம்பலவாணர் மூத்த கைம் பெண் அன்னப்பிள்ளையும் மறு பேரும் எல்லோரும் அளவெட்டி தெற்கு அளவெட்டி
பிரதிவாதிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் T. 2000-ஆம் இலக்க வழக்கின்படி எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970-ம் ஞூ மார்கழி மாதம் 13-ம் திகதி (13–12–70) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-00 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் வடக்கு மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி இறை "கலட்டி" நிலப் பரப்பு 7, 5/8 ம் வீடும் கிணறும், செய்பயிர் வான்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கும் வடக்கும் தெற்கும் ஒழுங்கை. மேற்கு வீரகத்தி கைம்பெண் கற்பகத்திற்கும் நாகமணி கைம்பெண் வள்ளியம்மையின் உரிமைக்காரருக்கும் உரிய ஆதனம். இதடங்கலிலும் சொரியலாய் அரை 1/2 பங்கு.

**கா. தர்மலிங்கம்,**
கொமிசனரும்விலைமதிப்பாளரும்,
உடும்பிராய் மேற்கு, 5-11–70,
எம். 369 13—11—70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஆறுமுகம் பொன்னையா, தையிட்டி, காங்கேசன்துறை
வழ இல: M B 10420 எதிராக வழக்காளி
வல்லிபுரம் நாகலிங்கம், தையிட்டி, காங்கேசன்துறை
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10420ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஆ டிசம்பர் (மார்கழி) மீ 14-ம் திகதி (14-12-70) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 1552-35 சதமும் 7-11-68 தொடக்கம் 7-9-69வரைக்கும் ரூபாய் 1000/–க்கு 12வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 322-60 சதமும் இதில் ரூபாய் 125/– குறைக்கப்படும்.

### ஆதன விபரம

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மைலிட்டிக் கோவிற்பற்று தையிட்டி இறை 'துளாய்' வரகுச் செய்கை நிலப்பரப்பு 5 (Lms. V. C. 5) எல்லை கிழக்கு தம்பையா பெண் நாகம்மாவுக்கும சகோதரிக்குமுரிய ஆதனம், வடக்கு: ஒழுங்கை, மேற்கு: வேலுப்பிள்ளை மூததையாவுக்குரிய ஆதனம், தெற்கு: சின்னத்தம்பி சிதம்பரப்பிள்ளைக்குரிய ஆதனம், இது முழுவதும் சொரியலாய் அரைப் பங்கும் அதிலுள்ள பொருட்களும். இது H 76/228ன் கீழ்ப்பதியப்பட்டது.

க சரவணமுத்து
173, குருசோவிதி, சுண்டிக்குளி யாழ்ப்பாணம். 2–11-70
கொமிசனர் & விலைமதிப்பாளர்
எம். 178 20-11-70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி, பழைய பூங்கா வீதி,
றப்பியல்பிள்ளை யோசெவ், — வழக்காளி
இல: M B 11250 எதிராக
யாழ்ப்பாணம், கரையூர் 1 சின்னப்பொடியன் மனுவல்
2 பெண் ஞேசம்மா —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11250ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970ம ஆ டிசம்பர் (மார்கழி) மீ 19ம் திகதி (19-12-70) சனிக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் முறையே அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விறகப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 1755/-ம், இதில் ரூபா 1500/-க்கு 17-11-69 திகதி தொடக்கம் 17-5-70 திகதி வரைக்கும் நூற்றுக்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடககம் முழுத தொகைக்கும் இறுபடும் வரைக்கும் நூற்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 232-62 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிகுளி கோவிற்பற்று கரையூரிறை "பேயன்தலைடையிற்புலம் அல்லது கொலலுதோட்டம்" நி. பர. 4ம் குளி 6½ம் வீடும், செய்பயிர் வான்பயிர்களும் இதில் கிழக்குப் பக்கமாக நிலப்பரப்பு (2) விற்றது நீக்கி மேற்கே மிகுதி நிலப்பரப்பு 2ம் குளி 6½ம் வீடும், பயிர்களும் ஒரு வருஷத்திற்கு கிழக்குக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் தண்ணீர் அள்ளும் உரித்தும் கற்கூசு பாவிப்புரித்தும், குறித்த நிலப்பரப்பு இரண்டும (2) குளி 6½ ம். எல்லை கிழக்கு செபமாலை அந்தோனிக்கும் பெண் நாகி அல்லது மாரியின் ஆதனம், வடக்கு இராசலிங்கம் வீதி, மேற்கு ஏ. பீ. சந்தியாக்கோவின் உரிமைக்காரருக்குரிய ஆதனம் தெற்கு: வயித்தி சந்தியாவுக்கும் பெண் ஆனுசக்குமுரிய ஆதனம் இதடங்கலும்.

**சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை**
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
தெல்லிப்பழை, 8-11-70
Commissioner & Valuer
எம் 383 20–11–70.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில்
இடைக்காடு, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
இடைக்காடு, அச்சுவேலி —வழக்காளி
இல: M B 8323 எதிராக
நாகன் சின்னக்குட்டி, கதிரிப்பாய், அச்சுவேலி. —எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 8323ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி, கீழே வீபரிக்கப்படும ஆதனம 1970-ம ஞூ மார்கழி மீ 26-ந திகதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விறகப்படும.

தீர்வைத்தொகை: முதலும வட்டியும் ரூபா, 966/- இன்னும் 25-5-66 — 3-7-67 வரைக்கும் 5 வீத வட்டியுங் கூட்டிக் கூட்டிய தோகைக்கு 3-7-67 தொடக்கம முழுப்பணம இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச செலவு 245 92 சதம இதில் தொகையால் கொடுத்த ரூபா 100ம், செலவால் கொடுதத ரூபா 100ம் போக மிகுதி

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் கிழக்குப் பகுதி அசசுவேலிக் கோவிற்பற்று கதிரிப்பாய் இறை 'கொன்னைவாரிக் கலட்டி' பர. நில. லா. 7 குளி 15 5/24 வீடும, வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு வேள்ளையன் சித்தனுக்குரிய ஆதனம், வடக்கு: கணபதி பொன்னனுக்குரிய ஆதனம், மேற்கு: கந்தன் கிட்டிணனுக்கும் மறுபேருக்குமுரிய வாதனம், தெற்கு: ஒழுங்கை, தெற்கெல்லைக்ருகால் வடக்கே கணபதி பொன்னனுக்கும சேம்பன் வேலனுக்குமுரிய காணிக்குப்போகும் 9 அடிஅகல ஒழுங்கையின் பாவிப்புப் பிற நீங்கலாக, இவ்வெல்லைக்குட்பட்டவை முழுவதும்.

**தா. க. பொன்னுத்துரை. J P.**
"அகிலகம்"
28/1, யாழ்வீதி. யாழ்ப்பாணம்.
8—11—70
கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
எம், 381 20—11—70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம

1. M. நடராசாவும் 2. பெண் சிவபாக்கியமும்
இருவரும், தோல்புரம, —வழக்காளிகள்
வழ. இல; M. B. 10534 எதிராக
1. ஆறுமுகம் சின்னத்தம்பியும்
2. பெண் சின்னம்மாவும் —எதிராளிகள்
இருவரும், தோல்புரம்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B 10534ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970ம் ஆ டிசம்பர் (மார்கழி) மீ 16-ந் திகதி [16–12–70] புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 2626/-ம், 12-1-69 தொடக்கம் 30-7–69 வரை ரூபா 2000 க்கும 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 363–55 சதமும், இதில கொடுபட்ட ரூபாய் 50C குறைக்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானை கோவிற்பற்று தோல்புரம் இறை 'புதரன்' நேற்செய்கை நிலப்பரப்பு 19 இதில மேற்கு பக்கமாக மிச்சமாக இருக்கும நிலப்பரப்பு நேறசெய்கை 10 (Lms. P. C.) யும கிழக்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றுப் பங்கும் தூரவை உரித்தும், நீர்வாய்க்கால் உரித்தும் எல்லை கிழக்கு: பொன்னம்பலத்தை விவாகம் செய்ய இருக்கும் பெண தங்கேஸ்வரியின் ஆதனம், வடக்கு: கணபதிப்பிள்ளை சின்னததமபியும் சகோதரனினதும ஆதனம், மேற்கு: ரோட்டும், முருகேசு கதிரவேலுவின் ஆதனமும், தெற்கு: பொன்னர் சின்னத்துரையின் ஆதனம.

க. சரவணமுத்து
173, குருசோ வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். 5–11–70
கொமிசனர் & விலைமதிப்பாளர்
எம். 179 20–11–70

---

## AUCTION SALE
## கோட்டுக்கொம்மிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோர்ட்டில்
வழக்கு இல: D C. 0 / 10
ஆழ்வார் கைம்பெண் பொன்னம்மா, துன்னுலை தெற்கு
எதிராக —வழக்காளி
1 வல்லிபுரம் கந்தசாமியும் (இறந்து விட்டார்)
2 பெண் சிவகாமிப்பிள்ளையும், துன்னுலை வடக்கு
— எதிராளிகள்

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனத்தை 1970ம ஆண்டு மார்கழி மீ 26-ம திகதி (26–12-70) சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

(இவ்வதனம் கலிகைச் சந்திக் கருகாமையிலுள்ளது)

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று துன்னுலை வீரசுந்தரழலிக் குறிச்சியிறை "அப்பாட்டியோல்லை" நி பர. 20½ இதில் தெற்குப் புறமாக மூன்றிலிரண்டு (2/3) பங்குக்கு நி. பர. பதின் மூன்று குளி பதினைந்து (நி. பர. 13 குளி 15) பனைகள், வடலிகள், வேம்புகள், தென்னைகள், கிணறும். எல்லை கிழக்கு: முருகப்பர் சின்னத்தம்பிக்கும் மறுபேரச்குமுடைய ஆதனம். வடக்கு: வல்லியார் கந்தர் தம்பையாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், மேற்கு: ஒழுங்கை, தெற்கு: நடேசு பெண் சின்னம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், இதிற் சொரியலாய் ஆறிலொரு (1/6) பங்கும்,

| | | | |
|---|---|---|---|
| 1 | தீர்வைத்தொகை | ரூபா | 3812 50 |
| 2 | 3-7-69 தொடக்கம் 9-2-70 வரை ரூபா 3812-50க்கு 12 வீத வட்டி | | 134 45 |
| 3 | 9-2-70 தொடக்கம் 3-10-70 வரை ரூபா 3946-95க்கு 5 வீத வட்டி | | 131 56 |
| 4 | கோட்டுச்செலவு (கணக்குப் பார்த்து) | | 234 71 |
| | முழுத்தொகை | ரூபா | 4313 22 |

**க. நா. சுப்பிரமணியம்**
புலோலி மேற்கு,
பருத்தித்துறை. 10-11-70
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
எம், 376 20-11-70

---

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 284-ம் நம்பர் கடையில் திரு. கா ந. இளையதம்பி அவர்களிடம் 1969-ம் ஆண்டு செப்ரேம்பர் (புரட்டாதி) மீ 1-ம் திகதி (1-9-69) திகதிக்கு முன் வைத்த அடைவு நகைகளில் 16-12-70 திகதிக்கு முன் மீட்கப்படாதவை 1970ம் ஆண்டு டிசம்பர் (மார்கழி) மாதம் 19 ஆம் திகதி (19–12-70) சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படுமே.

வி. செ. குட்டிப்பிள்ளை
ஏலவிற்பனவாளர்
"இராசகிரி"
643, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
எம். 370 13, 27—11—70

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

(2-ம் பக்கத்து வளர்ச்சி)

நிலையை அடைந்தார். மிஷனரிமார்கள் தங்கள் மதமாற்றத்தை மிகவும் மிகவும் தீவிரமாகச் செய்வதனைக் கண்ணுற்ற நமது ஆறுமுகம் கொதித்து எழுந்தார்.

### கசடறக் கற்றல்

ஆறுமுகம் தனது சமயமாகிய சைவசமயத்தில் உள்ள சைவ ஆகம நூல்களைத்தேடிக் கற்க முடிவு செய்தனர். தமது இருபத்து மூன்றுவது வயது பூர்த்தியாவதற்கிடையில், சைவசமய சம்பந்தமான எத்தனையோ அரிய, பெரிய நூல்களைத் துருவித் துருவி ஐயந்திரிபறக் கற்றுத் தெளிந்துவிட்டார். ஒருவருடைய வாழ்க்கையில் ஆற்ற முடியாத இத்தீவிரச்செயலை இவர் எவ்வாறு கற்றுத் தேறினார் என்பது எல்லோருக்கும் என்றும் விளங்காத புதிராகவே இருந்துவருகின்றது. மேலும், இலகுவில் வாசித்து அறிய இயலாத - செய்யுள் நடையில் உள்ள எத்தனையோ தொன்மை வாய்ந்த சைவ ஆகம நூல்களைக் கசடறக் கற்றதோடமையாது மனனம் செய்துங் கொண்டாரென்பர். இந்நூல்களைத்தாமாகவே ஓதியுணர்ந்தார். அத்துடன் சம்ஸ்கிருத பாஷையையும் கற்றுப் பண்டிதரானார்.

ஆறுமுகம் தனது சூழலில் உள்ளவர்களுக்குச் சைவசமயஉண்மைகளையும் செந்தமிழிலுள்ள செல்வத்தையும் விளக்குவான் வேண்டி, இலக்கியவகுப்புஒன்றினை ஆரம்பிப்பதில் கவனத்தைச் செலுத்தினார். இரவிலும் பகலிலும் நடாத்தப்பட்ட இந்தப் பாடவகுப்புக்கு அவரது வயதையொத்த வாலிபர்களும் மற்றவர்களும் கல்விகற்க வந்தார்கள். மிஷனரிமார்கள் எவ்வாறு தங்கள் மதத்தைப் போதித்துப் பரப்ப முயன்றார்களோ, அதனைப் பின்பற்றி இவரும் சைவசமயத்தைப் பரப்புவதற்குப் பல முயற்சிகள் எடுத்தார். மூன்றாண்டுக்குள் பல இளைஞர்கள் தமிழிலும் சம்ஸ்கிருதத்திலும் வல்லுனரானார்கள்.

1847ம் ஆண்டு மார்கழி மாதம் 31ம் நாள் வண்ணார்பண்ணைச் சிவன்கோவில் மண்டபத்தில், பல சைவப் பெரியார்கள் கூடிய சபை முன்னிலையில், சைவப்பொலிவும் தவவேடமும் ஒருங்கே மிளிரத் தோன்றி, அரியதொரு சமய விரிவுரை பொழிந்தார், அருள் மழை பொழிந்தார் எனலாம்! அவர் ஆற்றிய சொல்விருந்தையும் செந்தமிழின் சிறப்பையும், அதனுடைய நயத்தையும், கங்கா நதியின் பெருக்கை நிகர்த்த பேச்சுத் திறனையும் செவிமடுத்தின்புற்றனர். இவருடைய இந்தச் சைவப் பிரசங்கங்கள் ஆரம்பமான சுபவேளையில், ஆலய மணியும் நாதகீதம் எழுப்பி, மலரப்போகும் புது எழுச்சியை வரவேற்பதுபோன்று கட்டியம் கூறிற்று! இந்த உபந்நியாசம் வாரந்தோறும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும்தவறுதுநிகழ்ந்துவந்தது.

(வளரும்)

### திருப்பூங்குடி வி. க. ஆறுமுகம்

வண்ணை, வைத்தீஸ்வரன் கோயில் தேவஸ்தான வித்துவானும் ஆசிரியருமாகிய திருப்பூங்குடி வித்துவான் வி. க. ஆறுமுகம் அவர்கள் கொழும்பு கணபதி வித்தியாலயத்தில் கடமையாற்றி வந்தனர். இப்பொழுது யாழ். இந்துககல்லூரி தமிழ் வித்தியாசாலைக்கு இடமாற்றஞ்செய்யப்பட்டுள்ளனர் (க. வி.)

### பாரபட்சமா?

சமீபத்தில் கல்வி அமைச்சு சிங்களப் படதாரிகள் 2500 பேரை நியமனஞ் செய்தபொழுது தமிழ்ப்பட்டதாரிகள் 103 பேரை மாத்திரம் நியமனம் செய்துள்ளனர். இப் பாரபட்சத்தை ஆட்சேபித்து அகிலஇலங்கைப் பட்டதாரிகள் சபையினது யாழ்ப்பாணக் கிளைச் சபை ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

## "பொருமைக்கு" உறக்கமில்லை!



பக்தர்: "நாவலர் பெருமான் வாழ்க்கை வரலாற்றில் பல புரட்சியான அதிசய கருத்துக்களைப் புகுத்திக் குழப்பத்தை உண்டுபண்ணுவதில் சில அறிஞர்கள் பெரும்பாடு படுகிறார்களாமே! இது தெரியுமா?"

சித்தர்: "இது பெரியகாரியமா! ஆதீனம் வந்தார்; பாடங் கேட்டார்; அதன் பிறகே பட்டம் பெற்றார் என்றெல்லாம் திரிபுபடுத்திக்கூறுகிறார்களாம்! இதற்கு எவ்வளவு துணிவு வேண்டும்? நாவலரிடத்தில் அக்காலத்தில் சிலர் கொண்டுள்ள பொருமை நிலை இன்றும் நீங்கவில்லைப் போலிருக்குது!" 'பொருமைக்கு உறக்கமில்லை' என்பார்கள்; உண்மைதான்!

"நாயன்மார் - நாதன்"

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல: M B 8148

1 வேலுப்பிள்ளை சந்திரசேனன் மனைவி
2 நித்தியானந்தி இருவரும் எபேற் பிவேஸ், கொழும்பு
—வழக்காளிகள்

எதிராக

1 கந்தையா நமசிவாயம் மனைவி
2 அன்னம்மா இருவரும் உடுவில்
3 கனகசபை சிவசுப்பிரமணியம் உடுவில். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8148ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1970-ம் ஆண்டு மார்கழி மீ 18ம் திகதி (18-12-70) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபாய் 25,400/-ம், 9-5-66 தொடக்கம் 7-11-67 வரைக்கும் ரூபாய் 20,000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 948-21

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில் கோவிற்பற்று உடுவில் இறை 'உண்டாட்டி" பரப்பு நி. லாச்சம் 22 இதில் வடக்குப் பக்கமாகவும் தென் மேற்குப் பக்கமாகவும் விற்ற பரப்பு நி. லாச்சம் 7 புற நீங்கலாக மிகுதிக் காணி பரப்பு நி. லாச்சம் (15) பதினைந்தும் வீடும், கிணறும், பயிர் வகைகளும் இதற்கெல்லை கிழக்கு: செல்லத்துரை பெண் பொன்னம்மாவுக்கும், கார்த்திகேசு கந்தப்பிள்ளையின் உரிமைக்காரருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், வடக்கு பிகுதி ஆதனமும் றேட்டும் மேற்கு றேட்டும், பீதாம்பரம் ஜெகநாதனுக்குமுரிய ஆதனம், தெற்கு சின்னத்தம்பி இராமலிங்கத்திற்குமுரிய ஆதனம்.

(பதிவு இலக்கம் H. 349/293)

மு. நவரத்தினராசா,
கொமிசனர் & விலை மதிப்பாளர்.
"கமலபதி"
ஆஸ்பத்திரி வீதி,
மண்டைதீவு;
எம். 392 20—11—70

## தக்ஷிண கைலாச மான்மியம்

இடமின்மையால் வெளிவரவில்லை. மறுவாரம் வெளிவரும்.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

காலஞ்சென்ற பெண் நாகம்மாவின் ஆதனங்களின் தத்துவக்காரன் செல்லையா வீரசிங்கம். இக்கோட்டின் தத்தவ வழக்கு இல: 1642 (மண்கும்பான்) —வழக்காளி

இல. M B. 10433 எதிராக

செல்லையா பாலசிங்கம், மண்கும்பான் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10433 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஆறு துண்டுக்காணிகளை 1970ம் ஆல மார்கழி மீ 28-ம் திகதி (28-12-70) திங்கட்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபாய் 6797-70ம், 13-11-68 தொடக்கம் 2-4-70 வரைக்கும் ரூபாய் 3900/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 530-01

ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி அல்லைப்பிட்டிக் கோவிற்பற்று மண்கும்பான் இறை "உவரோடைக்கு மேற்கு உவரோடை" நி. பர. 25 எல்லை வடக்கு கணேசு கைம்பெண் முத்தம்மாவின் ஆதனம், கிழக்கு: சுப்பையா கந்தையா இராசையாவின் ஆதனம், மேற்கு: சதாசிவம் பெண் பருபதத்தின் ஆதனம், மண்கும்பான் முருகமூர்த்தி கோவில் ஆதனம். இதடங்கலிற் சொரியலாய் 1/6 பங்கு

2. மேற்படி இறை "பூவற்கள்ளிக்கு மேற்கு உவரோடைக்கு வடக்கு உவரோடை" நி. பர. 100ம் வான்பயிர் செய்மதிகளும். எல்லை கிழக்கு: செல்வராசா பெண் சின்னம்மாவினதும் பங்காளரினதும் ஆதனம்; வடக்கு, பொன்னம்பலம் பெண் இராசம்மாவினதும் பங்காளரினதும் ஆதனம், மேற்கு: சதாசிவம் பெண் பருபதத்தினதும் பங்காளரினதும் ஆதனம், தெற்கு ஆறுமுகம் கந்தையாவினதும் கந்தையா பெண் சின்னம்மாவினதும் ஆதனங்கள், இதில் சொரியலாய் 53, 3/8 நி. பர. இதில் சொரியலாய் ½ பங்கு.

3. மேற்படி இறை "உப்புத்தறை" 50 பனைகளும், வடலிகளும் எல்லை கிழக்கு: வைத்தியநாதர் அருளம்பலத்தின் ஆதனம், வடக்கு றேட்டு, மேற்கு விநாசித்தம்பி கணபதி பிள்ளையினதும் பங்காளரினதும் சின்னப்பொடியர் நாகமணியினதும் ஆதனங்கள், தெற்கு வயிரமுத்து செல்லையாவினதும் கார்த்திகேசு முத்தையாவினதும் ஆதனங்கள், இதடங்கலிற் சொரியலாய் நி. பர. 12 இதில் சொரியலாய் 1/3 பங்கு

4. மேற்படி இறை "பூவற்கள்ளி" நி. பர. 12ம் பனைகளும் வடலிகளும் எல்லை கிழக்கு சின்னப்பொடியர் நாகமணியினதும் பங்காளரினதும் ஆதனம், வடக்கு பழைய றேட்டு, மேற்கு வேலாயுதம் பெண் முத்துமாலையினதும் பங்காளரினதும் ஆதனம், தெற்கு கந்தையா பெண் சின்னம்மாவினது ஆதனம், இதடங்கலிற (1/6) ஆறிலொரு பங்கு.

5. மேற்படி இறை "உவரோடையிற் தெற்கு உவரோடை பூவற்கள்ளி" நி. பர. 16 எல்லை கிழக்கு கந்தையா பெண் சின்னம்மாவினதும் வீரகத்தி வேலுப்பிள்ளையினதும் சோமசுந்தரம் மகள் சின்னம்மாவினதும் ஆதனங்கள், வடக்கு; கந்தையா பெண் சின்னம்மாவினது ஆதனம், மேற்கு கந்தையா பெண் சின்னம்மாவினதும் முத்தர் வேலாயுதரினதும் இராமலிங்கம் அரியபுத்திரனினதும் ஆதனங்கள். தெற்கு பேரம்பலம் பெண் இராசம்மாவின் ஆதனம், இதடங்கலிற் சொரியலாய் நி. பர. 1 இதில் சொரியலாய் (1/3) மூன்றிலொரு பங்கு

5. மேற்படி இறை "தாழையடிக்கு மேற்கு உப்போடையும் புங்கடிக்கும் நருவில்லிபடிக்கும் வடக்கு உப்போடைக்கு வடக்கு உப்போடை" நி. பர. 54¼ எல்லை கிழக்கும் மேற்கும் ஆறுமுகம் சோமசுந்தரத்தின் ஆதனம், வடக்கு முத்துகுமாரு பெண் மாரிமுத்தின் உரிமைக்காரரின் ஆதனம், தெற்கு சோமசுந்தரம் பெண் தங்கம்மாவினதும் பங்காளரினதும் ஆதனம். இதடங்கலிற் சொரியலாய் நி. பர. 6¼ இதில் சொரியலாய் ½ பங்கு

சு. கந்தசாமி
19, சுவாமியார் வீதி, கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். எம். 391 20-11-70

### கோட்டு விற்பனவு விளம்பரம்

1. சரவணை தமபுவும் 2. சீனிப்பிள்ளையும்
இருவரும், வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம்.
இல: M B 8724 எதிராக —வழககாளிகள்
1. வைரவன் குட்டியும் 2. பெண் கண்மணியும்
இருவரும், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8724ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஆண்டு மார்கழி மீ (டிசம்பர் 23-மதிகதி (23-12-70) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 8265-00 சதமு 4-1-67 தொடக்கம் 6-8 68 வரைக்கும் ரூபாய் 7250/-கு 12வீத வட்டியும் அதன்பின் இறுக்கும வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 306-52 சதமும் கோட்டுச் செலவில் கொடுபட்ட ரூபாய் 150/- குறைக்கப்படும். இன்னும் ஏதுங் கொடுபட்டிருந்தால் அது குறைக்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று சிவிடாதெரு இறை "நறுவிலிய வழவு" வரதச் செய்கை நிலப்பரப்பு 4ம், 5 குளியும், வீடும், அடுக்களையும், பனைகளும், தென்னைகளும் மற்றும் செய்பயிரும் வான்பயிரும் மேற்கெல்லைக் காணியின் கிணற்றுப் பங்கும், எல்லை கிழக்கு: இராமு பெண் வள்ளியம்மையினதும் செல்லப்பா கனகரத்தினத்தினதும் ஆதனங்கள், வடக்கு செல்லப்பா அருளானந்தத்தினதும் பெரியதம்பி பெண் தெய்வானையினதும் ஆதனங்கள், மேற்கு: சிங்கராயர் பாக்கியநாதனதும் பங்காளர் இளையதம்பி செல்லப்பாவினதும், கந்தையா பெண் தங்கம்மாவினதும் ஆதனங்கள், தெற்கு: ஒழுங்கையும், இராமு பெண் வள்ளியம்மையினுடைய ஆதனமும், மேற்குக் காணியிலுள்ள கிணற்றின் தனிப்பட்ட பாவிப்புரித்தும் கிழக்கெல்லைக் காணிக்குரிய வாய்க்காலுரித்தும், யாழ்ப்பாணப் பதிவு இலக்கம் D. 320/110

க. சரவணமுத்து
173, குருசோவீதி சுண்டிக்குளி, கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
யாழ்ப்பாணம். 9-11-70 எம் 380 20-11-70

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வேலுப்பிள்ளை கந்தசாமி, பனை. —வழக்காளி

வழ: இல M. B. 10805 எதிராக

காலஞ்சென்ற ஆச்சிப்பிள்ளையின் ஆதனத்தில் தத்துவக்காரர்
சின்னப்பிள்ளை கந்தையா, பனை —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 10805-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுகாணி 1970-ம் ஆல மார்கழி மீ 14-ம் திகதி (14-12-70) திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: - முதல் வட்டி ரூபாய் 2322-63ம்; 20-12-68 தொடக்கம் 19-3-70 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு 12% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 330-80

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று பனை இறை 'அக்கறை விலான்" நி. பர. 22 குளி 15 இதற்கு எல்லை கிழக்கு சிதம்பரப்பிள்ளை ஆச்சிப்பிள்ளையின் ஆதனம், வடக்கும், மேற்கும் கதிர்காமர் இளையதம்பியின் ஆதனம், தெற்கு றேட், இதடங்கலிற் சொரியலாய் 1/3 பங்கு இத்துடன் வடக்குப் பக்கத்திலிருக்கும் கிணற்றில் பங்கும். கிழக்குப் பக்கமாக இருக்கும் எல்லையிலிருந்து வழிவாய்க்காலும் கானும், இந்தக் கான் வடக்குப் பக்கமான எல்லையிலிருந்து தொடங்குகிறது. இந்த வடக்கு எல்லை கிருஷ்ண இளையதம்பியின் ஆதனம்.

19 சுவாமியார் வீதி, சு. கந்தசாமி
கொழும்புத்துறை கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
யாழ்ப்பாணம், எம் 390 20—11—70

## யாழ். வண். நாவலர்மகாவித்தியாலயம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை விழா 21, 22-11-70 (சனி, ஞாயிறு) ஆகிய இருதினங்களும் வழமைபோலச்சிறப்பாகக் கொண்டாடப்பட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. வடமாநிலக் கல்வியதிபதி திரு. வே. சங்கரலிங்கம் அவர்கள் தலைமையில்விழா நிகழும். பல அறிஞர்களின் பேருரையும், மாணவர்கள் பேச்சு, கலைநிகழ்ச்சிகள். நாடகம் ஆகியனவும் இடம்பெறவுள்ளன.



## Commission Sale

## கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் இல: 10535

1 முருகேசு திருநாவுக்கரசு 2. பெண் பரமேஸ்வரி,
புலோலி தெற்கு —வழக்காளிகள்
எதிராக
1. கணபதிப்பிள்ளை தியாகராசா 2. பெண் மீனாட்சி
3. இளையதம்பி வயிரவிப்பிள்ளை 4. பெண் சின்னம்மா
புலோலி தெற்கு —எதிராளிகள்

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எமக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ்விபரிக்கப்படுமாதனங்களை 1970ம் ஞு மார்கழி மீ 28-ம் திகதி (28-12-70) திங்கட்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் குறித்த காணிகளிடமிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறை கோவிற்பற்று

1. புலோலி கிழக்கு சிற்றம்பலதேவன் குறிச்சியிறை கள்வியந்திடல் நி. பர. 67½ இதில் கிழக்குப் புறமாக பரப்பு 61ல் வடக்குப் புறமாகப் பரப்பு 15 குழி 10 நீக்கி அதற்குத் தெற்குப் புறமான நி. பர. 27 குழி 14 இதற்கு உலாந்தா மேஸ்தர் ஆ. கந்தையாவால் 1899ம் ஆ சித்திரை மீ 29-ம் திகதி ஓர் படம் விந்தாரிக்கப்பட்டு பருத்தித்துறை ரெக்குவெஸ்துக் கோட்டு 1443-ம் இலக்க வழக்கில் அணைக்கப்பட்டிருக்கிறது. எல்லை கிழக்கு: றேட்டு, வடக்கு: பின்னால் காணும் 2-ம் ஆதனம், மேற்கு: குமாரு சதாசிவத்துக்கும் மனுபேருக்குமுடைய ஆதனம், தெற்கு: வல்லைப்பெற்றுனைச் சுப்பிரமணியசுவாமி கோவிலாதனம், இதில் சொரியலாய் நி. பர. ஒன்பது குழி அரையில் ஒன்பதில் இரண்டு பங்கும், தெற்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றிலும் மேற்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றிலும் இதற்குரிய பங்கும் வழி வாய்க்காலுரித்தும.

(மதிப்பிட்ட விலை ரூ. 6000/-)

2. ஷ இறை மயிலிசெம்பாடு நி. பர. 10 கள்ளியந்திடல் நி. பர. 15 குழி 10 கூடிய நி. பர. 25 குழி 10 இதில் மேற்குப் புறமாக ஐந்திலொரு பங்கு நீக்கி மிகுதி ஐந்தில் நாலு பங்கு உலாந்தா மேஸ்தர் மா. வேலுப்பிள்ளையால் 1937ம் ஆ வைகாசி மீ 17-ம் திகதி 300ம இலக்கத்தில விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி நி. பர. 20 குழி 8 எல்லை கிழக்கு றேட்டு, வடக்கு: முடிக்குரிய ஆஸ்பத்திரி, மேற்கு: குமாரு இராமலிங்கத்திற்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு: மேற்சொல்லிய முதலாம் ஆதனம், இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், கிணற்றில் சொரியலாய் இருபதில் மூன்று பங்கும்.

(மதிப்பிட்ட விலை ரூபா 7708/-)

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை: முதலும் வட்டியும் | ரூபா | 6014-17 |
| வட்டி ரூபா 3500/-க்கு 8 வீதப்படி 10-6-69 தொடக்கம் 4-10-69 வரை | | 93-00 |
| வட்டி ரூபா 6107/-க்கு 5 வீதப்படி 4-10-69 தொடக்கம் 4-10-70 வரை | | 305-00 |
| வட்டி ரூபா 6107/-க்கு 5 வீதப்படி 4-10-70 தொடக்கம் 28-12-70 வரை | | 69-96 |
| | மொத்த ரூபா | 6482-13 |

சிவலிங்கநிலையம், க. நல்லலிங்கம்
வி. மூ. றேட், ஏல விற்பனையாளர் & விலைமதிப்பாளர்,
பருத்தித்துறை, 15-11-70. எம். 386 20—11—70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

காரைதீவு மேற்கு 1. கந்தையா ஆறுமுகம்
2. மனைவி பரமேஸ்வரி
இல: M. B. 10800 எதிராக —வழக்காளிகள்
காரைதீவு வடக்கு 1. பொன்னம்பலம் செல்லத்துரை
2. மனைவி ஆச்சிமுத்து —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10800 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ்க்காணும் ஒரு துண்டுக்காணி 1970ம் ஆ டிசம்பர் மீ (19-12-70) சனிக்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை: மூதல் வட்டி ரூபா 2673/- மேலும் ரூபா 2000க்கு 12-5-65 தொடக்கம் 1-4-70 வரையும் 8 வீத வட்டியும் கூடிய தொகைக்கு இறுபடும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 305-95

ஆதன விபரம்

வட்மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி காரைதீவுக் கோவிற்பற்று காரைதீவு மேற்கிறை 'மாவெட்டை' நெல்லும் நிலையும் பர. 10 அளவின்படி நெ. பர. 12½ (பன்னிரண்டரை எல்லை கிழக்கு: நல்லதம்பி சேண இலட்சுமியின் ஆதனம், வடக்கு: அம்பலவாணர் கைம்பெண் வள்ளியம்மையின் ஆதனம், மேற்கு: சுப்பிரமணியம் கைம்பெண் சிதம்பரத்துக்கும் பரமு கந்தையாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள், தெற்கு: ஆறுமுகம் பெண் மீனாட்சியின் ஆதனம். இதட்ங்கலும்,

S. இரத்தினசபாபதி, J. P
ஸ்ரேசன் றேட், கொமிசனரும், விலைமதிப்பாளரும்
கோண்டாவில், 1-11-70, எம். 374 20-11-70


## நானிலம்போற்றும்...

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

ளைப் புகழ வந்தது இக்கட்டுரையன்று நாவலர்பெருமான் கருத்து மாறாது வாழ்ந்த சுன்னாகம் வித்துவ சிரோமணி அ. குமாரசுவாமிப் புலவரவர்கள் போதனா முறையும் சைவ பரிபாலனமும் நாவலர் பெருமானை மறவாமை நிற்றலின் வரையச் சில தோன்றின. புலவர் கருணை அடியேன் பெற்றமை வாய்ப்பேச்சளவன்று.

புலவரவர்களின் ஒருகவி

ஐந்தின்பின் ஆவதென்ன
ஆனனத்தின் பேரென்ன
மூந்துநடுவின் மொழியென்ன —
இந்திரற்கு
மாறு கொண்டோன் பேரென்ன
வாக்கின் மிகவல்ல
ஆறுமுக நாவலனே யாம்,

நாவலர் திருவுருக் கண்டு களிப்படைய நல்லூர் இன்றுந் திருமேனிப் பண்பாடு காட்டுகின்றது. நாவலர் பேரறம் வாழ்க.

——

### ஒரு விண்ணப்பம்

"இந்துசாதனம்" தமிழ்ஆங்கிலப்பத்திரிகைகளினது சந்தாதாரர்களைத் தங்கள் சந்தாப்பணத்தை நிலுவையின்றி செலுத்தும் வண்ணம் விநயத்துடன் கேட்டுக்கொள்ளுகிறோம். —அதிபர்.



## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M B 10988
உரும்பிராய்,
சின்னக்குட்டியர் தம்பிப்பிள்ளை
— வழக்காளி

இணுவில். இணுவில் மேற்கு,
1 கந்தையா நடராசா
2 கந்தையா துரைராசா
3 கந்தையா இராசா
4 கந்தையா தம்பித்துரை
5 கந்தையா சதாசிவம்
6 அருணசலம் இராசதுரை
7 மனைவி ஞானம்மா [யும்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B 10988-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970-ம் ஞு டிசம்பர் மீ 19-ம் திகதி (19-12-70) சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்தைத்தொகை: முதல்வட்டி ரூபா 1428/-ம், மேலும் ரூபாய் 1000/-க்கு 27-7-69 தொடக்கம் 28-3-70 வரையும் 10 வீத வட்டியும் கூட்டிய தொகைக்கு இறுபடும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 308-42

ஆதனவிபரம்

வட்மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவிற் கோவிற்பற்று இணுவில் இறை 'கொச்சியெல்லை மிக்யன்'' வி. பர. 6 குழி 12 இதில் தெற்குப் பக்கமாக சீதனம் கொடுத்த வி. பர. 5 நீக்கி மிகுதி வி. பர (1-குழி 12) ஒன்றும் குழி பன்னிரண்டும் வான்பயிர் செய் பயிர்களும் வடகிழக்கு மூலையிலிருக்கும் கிணற்றிலிதற்குரிய பங்கும், இந்தப் பரப்பு ஒன்று குழி பன்னிரண்டுக்கும் எல்லை கிழக்கு செல்லையா பெண் இராமணியினுதனம், வடக்கு கதிர்காமர் அம்பலவாணரினுதனம், மேற்கு ஒழுங்கை, தெற்கு மயில்வாகனம் பெண் முத்துப்பிள்ளையினுதனம், மிகுதிக்காணிக்கும் அதன் மேற்கெல்லைக் காணிக்குமுரியதுி கிணற்றுப் பங்கும் வழிவாய்க்காலுரித்தும் புறநீக்கலாக மிகுதியடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

செ. இரத்தினசபாபதி J.P.
கொமிசனரும்விலைமதிப்பாளரும்.
ஸ்ரேசன் றேட்டு,
கோண்டாவில். 14-11-70.
எம். 389, 20-11-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

Bank of Ceylon having its head office in fort in Colombo and branch office at No; 476 and 476 A, Hospital Road Jaffna. —வழக்காளி

வழ: இல. M, B. 9574 எதிராக

1 கணபதிப்பிள்ளை சமுவேல் குமாரசாமி
2 குமாரசாமி சமுவேல திசைராசாவும் மனைவியும்
3 பண்டிதநாயகி திசைராசா, எல்லோரும், நெடுந்தீவு
— எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9574ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970ம் ஞு மார்கழி மீ 29-ம் திகதி (29-12-70) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 3768-71ம், 31-10-67 தொடக்கம் 12-5-69 வரைக்கும் ரூபாய் 3768-71க்கு 7 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 447-71

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி நெடுந்தீவுக் கோவிற்பற்று நெடுந்தீவுகி ழக்கு இறை 'வளையம்பிட்டி' என்னும் காணி 4 ஏக்கர் 28 பேர்சேஸ் உலாந்தா W. C. S. Ingkes அனுமதிக்கப்பட்ட பட இலக்கம் 326241, 21-7-1917ல் அளக்கப்பட்டது. பின்னால் 15-9-61ல் உத்தரவு உலாந்தா ஏகாம்பரத்தால் அளக்கப்பட்ட ஆதன இலக்கம் 150A எல்லை கிழக்கு றேட்டுக்கு விலக்கப்பட்ட ஆதனம், வடக்கும், மேற்கும் அவ்வூர் வாசிகளுக்குரிய ஆதனம்; தெற்கு அரசாங்கத்துக்குரிய ஆதனம். பதிவு இலக்கம்: C. 340/186

நம் 35/2, கொழும்புத்துறை வீதி, இ. கனகரத்தினம்
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
(எம். 382 20-11 70)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சிவவாசகம் பரமநாதன் - உரும்பிராய் வடக்கு உரும்பிராய்
வழ. இல: M. B. 9836 எதிராக —வழக்காளி

1. சுந்தரம்பிள்ளை சிவராசா 14/1 கிதானை ஒழுங்கை
ஈச்சமட்டை, யாழ்ப்பாணம்
2. வயித்திலிங்கம் தம்பிப்பிள்ளை பூரணவிலை மாதகல்
3. திருமதி இராசமணி மயில்வாகனம 61/4 பரித்தித்துறைவீதி
ஆனைப்பந்தி
4 சபாரத்தினம் சூரசங்காரன் - வைமன்வீதி, நல்லூர்
5. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை கைம்பெண் நாகம்மா
தனங்கிழப்பு, சாவகச்சேரி
6. இரத்தினம் சபாபதிப்பிள்ளை வைமன் வீதி, யாழ்ப்பாணம்
7. நாகமுத்து கந்தையா கைம்பெண் நேசம்மா
கச்சேரி கிழக்கு ஒழுங்கை நல்லூர் தெற்கு
8 செல்லத்துரை புஷ்பரத்தினம் குருசுமதவடி ஆனைக்கோட்டை
9. விஞசித்தம்பி நவரத்தினம் அராலி வட்டுக்கோட்டை
10. இராமநாதர் முருகேசு C. C. சோமசேகரம் பிரகார்
மேற்பார்த்து நாவலர் வீதி யாழ்ப்பாணம்
11. ஹற்றிக் மரியாம்பிள்ளையும் பெண்
12. எலிசபெத் சரோஜினியும் ஈச்சமட்டை, யாழ்ப்பாணம்
13. கந்தப்பு சந்திரசேகரமும் பெண்
14. லலிதாம்பாளும் கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9836-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1970-ஆம் ஆ மார்கழி (டிசம்பர்) மீ 19-ம் திகதி (19-12-70) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல்வட்டி ரூபா 11400/-ம் 18-3-1968 தொடக்கம் 9-6-1969 வரைக்கும் ரூபா 7000/- க்கு 9 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 678-96.

ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சிவியாதெரு இறை "ஆடலயடியிற் புலமும் மறு பிரிவுகளும் ஆடலயடியில் வளவும் ஆடலடியிற் புலமும் இன்னும் சுடலை வளவும் சுடலையடியிற் புலமும்' என்றும் அழைக்கப்படுகிறது. நில, பர, 30 செய்பயிர் வான்பயிர்களும் மேற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும். இதில் தென் மேற்கில் உத்தரவு பெற்ற உலாந்தா A. லாசறஸ் அவர்களால் 8-7-1960 ல் தயாரிக்கப்பட்ட 2745 இலக்கப் படத்தில் காட்டப்பட்டிருக்கும் பிரிக்கப்பட்ட நில, பர. 7 குழி 3 எல்லை கிழக்கு இதன் மிகுதியாக இருக்கும் 1ம் எதிரிக்குரிய ஆதனம் வடக்கு பொன்னையா நவரத்தினம் பெண் மீனும்பிகைக்குரிய ஆதனம், மேற்கு வழிப்பாதை, தெற்கு K. குணரத்தினத்துக்கும், K. தியாகராசாவுக்கும், V நவரத்தினத்துக்கும், K அம்பிகாநிதிக்கும் உரிய காணிகள். இத்துடன் வழிப்பாதைப் பாவிப்பு உரித்தும், பதிவு இலக்கம்: D. 277/233

22, கோவில் வீதி, நீ. அன்ரனிப்பிள்ளை,
யாழ்ப்பாணம். கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
எம். 387 20—11—70


வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மூ. மயில்வாகனம் அவர்களால் 13—11—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மூ. மயில்வாகனம் அவர்கள்